## பிரிவு – 7

## உள்ளாட்சி மன்றங்கள் – அதிகாரங்களின் போதுமான தன்மையும், நடைமுறைகளைச் சீரமைத்தலும்

**4.7.01.** ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்பகுதிகளிலும் உள்ளாட்சி மன்றங்கள் மூலம், ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளின் அளவைக் கருதிப் பார்க்கும்போது, ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்குமிடையே பணிகளுக்கு அனுமதியளிப்பது தொடர்பான அதிகாரங்களில் பெரும் வேறுபாடு காணப்படுவது தெரிய வருகிறது. திட்டங்கள், பணிகள் குறித்த செலவு, சொந்த நிதியிலிருந்து செய்யப்படுவதாக இருந்தாலும் சரி அல்லது வெளியேயிருந்து கிடைக்கும் அதாவது மாநில, மத்திய அரசுகள் அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு செய்யப்படுவதாக இருந்தாலும் சரி, அவற்றுக்கு நிருவாக அனுமதியளிப்பது தொடர்பாக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் போதிய அதிகாரங்களைக் கொண்டிருக்கையில்; நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. சென்னை மாநகராட்சிகயைப் பொறுத்தவரையில், அனுமதிளிப்பதற்குரிய அதிகார உச்சவரம்பு ரூ.7.00 இலட்சம் என்றும், மதுரை கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்கு ரூ.3.00 இலட்சம் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் நிலை நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நகராட்சிக் குழுக்கள் ரூ.0.50 இலட்சம் வரை அனுமதிக்கப்படும் அதிகாரம் கொண்டிருக்கையில், சிறப்பு மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளின் அதிகார உச்சவரம்பு ரூ.4.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் முறையே ரூ.2.00 இலட்சம், ரு.1.00 இலட்சம் வரையில் அனுமதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளன. 1994 ஆம் ஆண்டில்தான் அரசு, சென்னை மாநகராட்சியின் அனுமதியளிக்கும் அதிகார உச்ச வரம்பை ரூ.7.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாகவும், மதுரை, கோம்புத்தூர் மாநகராட்சிகளின் அனுமதியளிக்கும் அதிகார உச்சவரம்பை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.25.00 இலட்சம் ஆகவும் உயர்த்தியது. அண்மையில் நிலை உயர்த்தப்பட்ட சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகள் ஏனைய நகராட்சிக் குழுக்களின் அளவுக்குத்தான் அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

**4.7.02.** விரிவான விவாதத்திற்குப் பிறகு உள்ளாட்சி மன்றங்களுக்குரிய, நிதிவகையிலான அதிகாரங்களை பெரும் அளவில் பரவலாக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆயினும், வருவாய் கணக்கில் செலவு, மூலதனக் கணக்கில் செலவு, குத்தகை/ஏலத்தின் மூலம் கிடைக்கும் வருவாய்கள் ஆகியவற்றையொட்டி பொதுநலன் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் சொத்துக்களைப் பாதுகாக்க அரசு போதுமான பாதுகாப்பு ஏற்பாட்டினை உருவாக்கலாம்.

**4.7.03.** தற்போது, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் தோராயமாக ஒரு கோடி ரூபாய் செலவிலானப் பணிகள் பெரும்பாலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் அளிக்கப்படும் நிதிகளைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்பணிகள், ஓராண்டு என்ற கால வரையறைக்குள் அதாவது, குறைந்தது அந்த நிதி ஆண்டிற்குள்ளாவது முடிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் பணிகளை முடிப்பதற்கு மாவட்ட அளவிலும், ஊராட்சி ஒன்றிய அளவிலும் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கு போதிய தொழில்நுட்ப அனுமதி/அதிகாரங்கள்

தேவைப்படுகிறது. நகராட்சிப் பணிகளைப் பொறுத்தமட்டிலும்கூட இதே நிலைதான் நிலவி வருகிறது. துறை அளவிலான கருத்தரங்குகள், மாவட்ட அமர்வுகள் ஆகியவற்றின்போதும் மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள் ஆகியோருடன் ஆணையம் கலந்தாலோசித்தது. பொருட்களின் விலை ஏற்றம், தொழிலாளர்கள் குறித்த செலவு, பணிகளை முடிக்கக் கொடுக்கப்பட்டுள்ள கால அட்டவணையைப் பின்பற்றுவதன் அவசியம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்த்தால், பல்வேறு அளவிலான தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தொழில் நுட்ப அனுமதி குறித்த தற்போதைய அதிகாரங்கள் போதுமானவையாக இல்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. கூடுதல் அதிகாரங்களை ஒவ்வொரு நிலையிலும் அளிப்பதன் மூலம், நிதி வகையிலான அனுமதியைப் பெறுவதற்கு உயர் அதிகாரிகளுக்கு மதிப்பீடுகளை அனுப்பும் நடைமுறையை தவிர்த்து அதன் வாயிலாக, கணிசமான காலத்தை மிச்சப்படுத்தலாம் என தொழில்நுட்ப அதிகாரிகள் ஆணையத்திடம் குறிப்பிட்டுள்ளார்கள். தலைமைப் பொறியாளர்கள் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணிகள் துறையும் மற்றும் நகராட்சி நிருவாகத் துறை அலுவலர்களும் இதே கருத்தையே ஆணையத்திடம் தெரிவித்தனர். நிருவாகம் மற்றும் திட்டச் செயலாக்கத்தின் கூர்முனைகளாக விளங்கும் மாவட்ட, ஊராட்சி ஒன்றிய நிலையிலாவது பொறியாளர்களின், பணிகளுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கும் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென ஆணையம் ஒருமனதாகக் கருதுகிறது. இதனால், செயற் பொறியாளர்கள்/ கோட்டப் பொறியாளர்கள், நிலையிலிருந்து அதிகாரங்களை உயர்த்த வேண்டியிருக்கும். இதில், உதவிச் செயற் பொறியாளர்/உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களும் அடங்குவர். எனவே, மேற்சொன்ன அலுவலர்களின் அதிகாரங்களைக் குறிப்பாக, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகளின் அதிகாரங்களை இணைப்பு 106 இல் குறிப்பிட்டுள்ளவாறு உயர்த்தலாம் என்று ஆணையம் பரிந்துரைக்கிறது.

### ஒப்பந்தப்புள்ளி முறை (Tender System)

**4.7.04.** ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பளிக்கும் நோக்கிலான திட்டங்கள் நீங்கலாக, அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணிகளும், அனைத்து நகராட்சிப் பணிகளும், ஒப்பந்தப் புள்ளி (Tender) முறையிலேயே நிறைவேற்றப்படுகின்றன. பன்னெடுங்காலமாக செயலிலிருந்து வரும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விதிமுறைகள் பொதுப் பணித்துறைப் பணிகள் குறித்த விதிக்கோள்களின் அடிப்படையிலானவையாகும். அதில் தவறுபவர்களுக்குக் கடுமையான அபராதம் விதிப்பதன் மூலம் ஏலதாரர்களிடையே ஆரோக்கியமான போட்டியை வளர்ப்பது, பணிகளின் தரத்தை உறுதி செய்வது, உரிய நேரத்தில் பணிகளை முடிப்பது ஆகிய தேவைகளையும் நிறைவு செய்ய இயலும். இருப்பினும், நன்கு நிலைப்பெற்றுவிட்ட இந்த ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளுக்கு முரணான, சில விரும்பத்தகாத நடைமுறைகள் உருவாகியுள்ள நிலையை அறிந்து ஆணையம் கவலையடைகிறது. ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள் வழங்குவது தொடர்பாக கட்டுப்பாடுகளை விதிக்க முற்படுதல், குறைவான ஒப்பந்தப் புள்ளிகளின் பேரில் அதிலும் ஒரே ஒரு ஒப்பந்தப் புள்ளியின் பேரில் பணிகள் ஒப்பந்தங்களை அளிப்பது ஆகியன இத்தகைய நிகழ்வுகளில் சிலவாகும். முதலாவதாக கூறப்பட்டது களத்தில் போட்டியை கட்டுப்படுத்துகிறது. இரண்டாடவதாகக் கூறப்பட்டது போட்டியே இல்லாமற் செய்து விடுகிறது. இரண்டு நடைமுறைகளிலுமே பொது நிதி விரயமாவதோடு, காலங்கடந்து முடிவு எடுப்பதற்கு நெடுங்காலம் எடுத்துக் கொள்வது, விலை அதிகரிப்பு, பணித்தரம் போன்ற பிரச்சினைகளில் மக்கள் பாதிப்பிற்குள்ளாகின்றனர். ஆரோக்கியமான போட்டி வளரவும் பணியின் தரம் சிறப்பாக அமையவும் ஒப்பந்தப் புள்ளி நடைமுறைகள் வெளிப்படையானதாக இருப்பதோடு மட்டுமின்றி, வெளிப்படையானவையாகத் தோன்றவும் வேண்டும். பணி தொடர்பான விதிக்கோவைகள், இந்நோக்கத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் இவை பின்பற்றப் படுவதைக் காட்டிலும், மீறப்படுவதே அதிகமாகவுள்ளது. தற்போதைய நிலவரத்திற்கு எந்தவொரு

தனிப்பட்ட சூழ்நிலையோ அல்லது அம்சமோ மட்டும் பொறுப்பல்ல; அதிகார வர்க்கத்தின் அக்கறையின்மை, தற்போது நிலவிவரும் சமூக, அரசியல் ரீதியான பண்புகள், பொது விவகாரங்களில் நேர்மையின்மை, இவற்றையெல்லாம் அனுமதிக்கக்கூடிய சூழ்நிலை ஆகியவை அனைத்துமே தற்போதைய இந்நிலைமைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

**4.7.05.** வேலைவாய்ப்பையும், வறுமை ஒழிப்பையும் நோக்கமாகக் கொண்ட திட்டங்களைப் பொறுத்தமட்டில், அரசு பிறப்பித்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளின்படி, உள்ளாட்சி மன்றங்கள் மூலம் பணிகளை நிறைவேற்றும் தற்போதைய நடைமுறை தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும், இதனால் வேலைவாய்ப்பளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி உள்ளூர் மக்கள் முழுவதுமாகப் பயனடைவது உறுதி செய்யப்படும் என்றும் ஆணையம் உறுதியாக நம்புகிறது. இருப்பினும், பதில் சொல்லும் பொறுப்பு நிர்ணயிக்கும் பொருட்டு, இது போன்ற வேலைவாய்ப்பு நோக்கிலான திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் இப்பணிகள் குறித்து செலவிடப்படும் ஒவ்வொரு காசுக்கும், ஊராட்சிகளையே முழுப் பொறுப்பாக்க வேண்டும் என்றும் ஆணையம் கருத்துத் தெரிவிக்கிறது. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இது போன்ற பணிகளுக்கும் இதே நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது.

**4.7.06.** விலை விவர அட்டவணை, (Schedule of rates) முக்கியமாக மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடும் தொழிலாளர் ஊதியம், உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து பணி நடைபெறும் இடத்திற்கு மண், செங்கற்கள் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வது குறித்து ஏற்படும் செலவு, சிமிட்டி, உருக்கு ஆகிய பொருட்கள் குறித்த செலவு ஆகியவை பற்றியே குறிப்பிடுகிறது. அங்காடி நிலவரத்தைப் பொருத்து, இந்த இனங்களின் விலைகள் வேறுபடுகின்றன. விலை விவர அட்டவணை வீதங்கள் நிர்ணயக் குழுவால் முடிவு செய்யப்படும் விலை வீதங்கள், அங்காடி நிலவரத்தோடு ஒப்பிடும்போது குறைத்து நிர்ணயிக்கப்படுவதாக அடிக்கடி தோன்றுகிறது; இதன் காரணமாக, பிரிமியத் தொகையுடன் ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள், மிக அதிகமாக உயர்த்தி கோரப்படுகின்றன. இப் பிரிமியத் தொகைகள் மிக அதிகமாகத் தோன்றுகின்றன. எனவே, விலை வீத விவர அட்டவணை வெளிப்படையானதாகவும், இரகசியமற்றதாகவும் குறைந்தது ஒரளவுக்காவது அங்காடி விலை வீதங்களை ஒட்டியதாகவும் இருக்க வேண்டும் என்றும் ஆணையம் கருதுகிறது.

**4.7.07.** உள்ளாட்சி மன்றங்கள் கோரும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதி வாய்ந்த ஒவ்வொரு நபரும் பங்கேற்க ஏதுவான வகையில், விளம்பரப்படுத்துதல் வேண்டும். விலை வீதங்கள் குறித்த பகுதியை அவர்களே நிரப்பி, வரையறுக்கப்பட்டுள்ள கால அளவிற்குள் (மூடி முத்திரையிட்ட) ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்ப வேண்டும் என்ற அறிவுரைகளுடன், விளம்பரப்படுத்துதல் வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்போது, ஒப்பந்தபுள்ளி விவர அட்டவணைகளையும் டைப் டிசைன்படி (முன்பே வெளியிடப்பட்டது) வெளியிடப்பட வேண்டும் என்றும் இது உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் உரிய நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணையைப் பெறுவதில் உள்ள தற்போதைய இடர்ப்பாடுகளைக் களைய உதவும் என்றும் ஆணையம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. மாற்று ஏற்பாடாக ஒப்பந்தப்புள்ளி நடைமுறை வெளிப்படையானதாயிருக்க வேண்டும் என்ற நோக்கத்தை எய்தும் வகையில், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளுடன் மதிப்பீடுகளின் சுருக்கமும் வெளியிடப்படலாம். உள்ளாட்சி மன்றங்கள் நிர்ணயித்துள்ள, ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தின் விலை மிகவும் சொற்பமானதாக இருப்பதால், ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் அனைத்து ஒப்பந்தகாரர்களும் பங்கேற்க இயலும் வகையில், விலைக்கு இவற்றை விற்கும் முறையைக் கைவிடலாம் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது. ஊராட்சிகள் நீங்கலான ஏனைய உள்ளாட்சி மன்றங்கள் ஒவ்வொன்றிலும் "பணிகள் குழு" ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும்; ஒப்பந்தப்புள்ளி குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு பரிந்துரை செய்யும் அதிகாரம் இப்பணிகள் குழுவிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது. ஊராட்சிகளைப் பொறுத்தவரை அவை தாமே இப்பணியை

மேற்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி கோருவதில் ஏற்படும் தவறுகள் குறித்த எந்தவொரு புகாரும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக 'பணிகள் குழுவிடம்' ஒப்படைக்கப்படலாம்; இப்பிரச்சினைகளைப் பரிசீலித்து, அவற்றிற்குத் தீர்வு காணும் அதிகாரமும் இக்குழுவிற்கு அளிக்கப்படலாம், ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணையை பெற்ற பின்னர், எவரேனும் ஒப்பந்தப்புள்ளி அனுப்பவில்லையானால், அதனை மிகவும் கடுமையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையம் கருத்துத் தெரிவிக்கிறது. தொடர்ந்து தவறு செய்பவர்களைப் பொறுத்தவரை, தவறுகளின் கடுமையைப் பொறுத்து அல்லது அடிக்கடி செய்யப்படும் தவறையொட்டி, அவருடைய பதிவு தற்காலிகமாக அல்லது கால வரையறையின்றி ரத்து செய்யப்படலாம். ஒப்பந்தப் புள்ளி கோரும்போது மதிப்பீடுகளைக் காட்டிலும் அதிக அளவில் குறிப்பிடப்பட்டுள்ள (Excess over Estimates) ஒப்பந்தங்களை அனுமதியளிக்கும் அதிகாரங்கள் குறித்த பிரச்சினைகள் பற்றியும் ஆணையம் பரிசீலித்தது. அடிப்படை நிலையிலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்களில் தொடங்கி, அரசு நிலை வரையில், ஒவ்வொரு நிலையிலும் முடிவு எடுப்பது, இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவுகளை, செயற்பொறியாளர்/கோட்டப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் வழியாக அனுப்புவது போன்ற தற்போதைய நடை முறை, அளவுக்கு மீறிய காலதாமதத்திற்கு வழிவகுப்பதோடு மதிப்பீடுகளைத் திருத்தியமைப்பதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய நிலையை ஏற்படுத்தி அதன் விளைவாக விலை ஏற்றத்திற்கும் வழிவகுக்கிறது. மேலும், இவையனைத்தும் தொடர் விளைவுகளை ஏற்படுத்துகின்றன, இன்றைய நிலவரப்படி, ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் ஆண்டொண்றுக்கு ரூ.800 கோடி முதல் ரூ.900 கோடி வரையிலான நிதியைக் கையாளுகின்றன. மதிப்பீடுகளுக்கு அதிகமான செலவிற்கு, அனுமதி பெறுவதில் செலவிடப்படும் கால அளவைக் குறைப்பதற்காக, கிராமப்புற பணியின் நேர்வில் தலைமைப் பொறியாளரால் அல்லது அவருக்குக் கீழுள்ள அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட பணிகளின் மூல மதிப்பீடுகளில் 25 சதவீதத்திற்கு மேற்படாத உயரளவாக ரூ.2,00,000 வரையிலான மிகைச் செலவுகளுக்கும் தலைமைப் பொறியாளரே அனுமதியளிக்கலாம். நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், சொந்த நிதியாக இருந்தால், மதிப்பீட்டுக்கு மேல் 5 சதவீதம் வரையிலும், அரசு நிதியாக இருந்தால், மதிப்பீட்டு வீதத்திலும் அனுமதியளிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர், பணியின் மதிப்பு ரூ.10 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால், மேற்சொன்ன மதிப்பீடுகளில் 10 சதவீத மிகைச் செலவுக்கு ஒப்பதல் அளிக்கவும், பணியின் மதிப்பு ரூ.10 இலட்சத்திற்கும் ரூ..25 இலட்சத்திற்குமிடைப்பட்டிருந்தால் 5 சதவீத மிகைச் செலவுக்கு ஒப்பதல் அளிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார். தற்போது இவ்வதிகாரத்தினை உள்ளாட்சி மன்றங்களில் தோற்றுவிக்கப்படும் பணிக்குழுக்களின் (Works Committee) பரிந்துரைகளுடன் உள்ளாட்சி மன்றங்களே ஒப்புதல் அளிக்கலாம்.

**4.7.08.** எனவே, மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

i) நிதி ஆதாரங்களைப் பரவலாக்கி உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுவதால், உள்ளாட்சி மன்றங்களின் சொத்துக்களையும் பொது நலனையும் பாதுகாப்பதற்காக குறிப்பாக வருவாய் கணக்கிலான செலவுகள், குத்தகை/ஏலம் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு துறைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து அரசு போதிய அமைப்பு முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

ii) பணிகளை வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் முடிப்பதற்கு ஏதுவாகவும், தரமாக அமையவும் ஊரக மற்றும் நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு நிலைகளிலுள்ள தொழில் நுட்ப அலுவலர்களின் தொழில் நுட்ப ஒப்புதலளிப்பு அதிகாரங்களைத் தகுந்தவாறு உயர்த்தலாம்.

iii) வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்கள் அனைத்தும், தற்போதுள்ள நடைமுறையின்படி மேற்கொள்ளப்படலாம். பொறுப்புகள் பஞ்சாயத்திடம் நிலைபெற்றிருக்கலாம். பணிகளை உரியவாறு குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்துதான் முழுப்பொறுப்பாகும். இதேபோன்றே பேரூராட்சி மற்றும், நகராட்சிப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அதிகாரங்கள் பேரூராட்சிகளிடமும், நகராட்சி குழுக்களிடமும் நிலை பெற்றிருப்பதுடன் அதற்காக அவற்றையே பொறுப்பாக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

iv) ஒப்பந்தப்புள்ளி நடைமுறை வெளிப்படையாகவும், ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவதாகவும் அமையவேண்டும் என்பது மட்டுமின்றி, பணிகளின் தரம் சிறப்பாக அமைவதை நோக்கமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைகளைப் பெறுவதில் தற்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் களைவதற்காக, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புடன், ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைகளும் வெளியிடப்படலாம்.

v) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் விலை மிகவும் சொற்பமாக உள்ளதால், இவற்றை விலைக்கு விற்கும் முறை கைவிடப்படலாம்.

vi) தொழில் நுட்பத்துறைகள் முடிவுசெய்த விலைவீத விவர அட்டவணைகள் (Schedule of Rates) இரகசியமாக இல்லாமல் அனைவரும் அறியும் படியானதாகவும், நியாயமான அளவுக்கு உள்ளூர் விலை வீதங்களைப் பிரதிபலிப்பனவாகவும் இருக்க வேண்டும்.

vii) ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வது குறித்தும், ஒப்பந்தப்புள்ளிகளில் உள்ள தவறுகள் பற்றி அளிக்கப்படும் புகார்களைக் கவனித்து தீர்ப்பது குறித்தும் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பரிந்துரைக்கும் அதிகாரங்களுடன் ஊராட்சி நீங்கலாக, ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்திலும் "பணிகள் குழு" அமைக்கப்பட வேண்டும். ஊராட்சிகள் தாங்களே இப்பணியைக் கவனித்துக் கொள்ளலாம். இக்குழு, பணிகளின் செயலாக்கத் தரத்தையும் ஆய்வு செய்யலாம்.

viii) ஒப்பந்தப்புள்ளிகளை விரைவில் முடிவு செய்து, பணிகளைத் தொடங்கும் பொருட்டு, மதிப்பீட்டு வீதத்திற்கும் அதிகமாக விலை குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை (Excess over Estimate Rates) ஏற்றுக் கொள்வதற்கு, தற்போதுள்ளவாறு, பல்வேறு நிலைகளில் ஒப்புதல் பெற அனுப்புவதற்குப்பதிலாக, பணிக்குழுவின் பரிந்துரைகளுடன், உள்ளாட்சி மன்றக் குழுக்களுக்கே ஒப்புதல் அளிக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.